## மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை - 2015

மீள் குடியமர்த்துதல் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்துதல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 20(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, மீள் குடியமர்த்துதல் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்தல்

2016 பெப்ரவரி 29 ஆந் திகதிய பீஎச்ஆர்டீ/145/சீஎம்02/2016 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 மார்ச் 24 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்குதல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம், அதிகாரசபைக்கு வேறு நிறுவனங்களிடமிருந்து கையளிக்கப்பட்டிருந்த சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,749,444 பெறுமதியான காலக்கழிவு, காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு விளைவுகளில் சீராக்கி காண்பிப்பதற்குப் பதிலாக முதலீட்டு நடவடிக்கைககளிலிருந்து உருவான காசுபாய்ச்சல்களாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 115,230 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 513,936 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 629,166 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனரமைப்பு, மீள் குடியமர்த்துதல் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற மானியங்கள் விசேட காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

அதிகாரசபைக்கு வேறு நிறுவனங்களிடமிருந்து கையளிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனங்கள், கணனி போன்ற 66 வெவ்வேறு நிலையான சொத்து வகைகள் தொடர்பான கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகள் நாளதுவரையாக பேணுவதற்கு அதிகாரசபை

நடவடிக்கை எடுக்காமல் இருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் அதிகாரசபையின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக அச்சொத்துக்கள் உரிய நிறுவனங்களுக்கு மீளக் கையேற்கும் போது சிக்கல்கள் எழக்கூடிய இடரொன்று கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதிருந்தது.

**4.2 பதவியணியினர் நிர்வாகம்**

அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலை தொடர்பான சிக்கலான நிலைமையொன்று காணப்பட்ட போதிலும், கீழே காட்டப்பட்டுள்ளவாறு முறையற்ற அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(அ) அதிகாரசபையினால் 2014 நவம்பர் 01 ஆந் திகதி முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் பூர்த்திசெய்திராத உத்தியோத்தரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஆ) அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு பதவிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்காதிருந்த போதிலும், 2015 யூலை 15 ஆந் திகதி உள்ளகக் கணக்காய்வாளரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், அந் நியமனம் தொடர்பான கடிதங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஒக்தோபர் 08 ஆந் திகதி அதிகாரசபைக்கு மதியுரையாளராக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்காக வருகை மற்றும் வெளிச்செல்லல் என்பன உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 303,367 படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மதியுரையாளரைச் சேர்ப்பதற்குரிய எவ்வித பதிவேடொன்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

அதிகாரசபையினால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைதீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்காக ஒரு மாவட்டத்திற்கு 06 செயற்பாடுகள் வீதம் உள்ளடக்கப்பட்டு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டினுள் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**5.2 பணிப்பாளர் சபைக் கூட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படும் போது அக் கூட்டத்திற்காக நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பான செயலாற்றல் அறிக்கை, மாதாந்த செயற்பாட்டு அறிக்கை, மாதாந்த காசுப்பாய்ச்சல் கூற்று, பதவியணியினரின் நிலைமையை காட்டும் அறிக்கைகள் போன்றவை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கைகள் மீளாய்விற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக 08 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**5.3 ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல்**

அதிகாரசபையின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | அதிகாரசபையை கலைப்பது தொடர்பாக கணக்குகளைத் தயாரித்தல். |
| (ஆ) சொத்துக் கட்டுப்பாடு | அதிகாரசபையின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்காக உரிய நிறுவனங்களுக்கு சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்ய வேண்டியிருந்தமை. |